செ.வெ.எண்.125/2009(செமதொஅ) நாள். 02.05.2009

**காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிகளில்**
**தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று துவங்கின.**

தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தேர்தல் வருகின்ற 13.05.2009 அன்று நடைபெற உள்ளது. அதனையொட்டி, தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. காஞ்சிபுரம் (தனி) மற்றும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிகளில் பணிபுரிய உள்ள தேர்தல் அலுவலர்களுக்கான முதல் கட்ட பயிற்சி வகுப்புகள் இன்று(02.05.2009) காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இப்பயிற்சியினை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,

" காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் பணிகளில் 13,033 அரசு ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். அவர்களுக்கு இன்று முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள சோழிங்கநல்லூர், தாம்பரம், ஆலந்தூர், பல்லாவரம், திருப்பெரும்புதூர், செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் காலை, மாலை இரண்டு பகுதிகளாக பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

காஞ்சிபுரத்தில் இரண்டு இடங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சியில் 2,065 அரசு ஊழியர்கள் கலந்து கொண்டுள்ளனர். தேர்தல் பயிற்சி வகுப்புகளுக்கு வராத அரசு ஊழியர்கள் மீது தேர்தல் ஆணைய விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன. தேர்தல் பணியாளர்கள் மருத்துவச் சான்று தந்திருந்தால் அவர்களுக்கு மருத்துவ குழு மூலம் மருத்துவ பரிசோதனை செய்யப்படும். எனவே தேர்தல் பயிற்சி வகுப்புக்களுக்கு கண்டிப்பாக வர வேண்டும்" என்று மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.